**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06ம் நாள் வெள்ளிக்கிழமை**

**RCS.No.356/2025**
**in**
**Cr.No.346/2021 of சாயல்குடி I PS**

வ.பொன்னுத்தாய்
க/பெ.வயனக்கண்,
கிழக்குதெரு,
கன்னிராஜபுரம்,
கடலாடி தாலுக்கா,
இராமநாதபுரம் மாவட்டம். ..மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்
சாயல்குடி காவல் நிலையம்,
குற்ற எண்.346/2021 ...எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 06.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் மனுதாரர் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.346/2021 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கையானது (Un Detected) செய்யப்பட்டுள்ளதை ரத்து செய்து வழக்கினை மறுவிசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்**

கடந்த 25.08.2021ந் தேதி காலை 10.00 மணியளவில் புகார்தாரர் தனது பேத்திகளான கவிபிரஷா மற்றும் சஷ்டிகாஸ்ரீ மற்றும் புகார்தாரரின் கணவர் வயணக்கன் ஆகியோரும் புகார்தாரர் தெருவை சேர்ந்த சிந்தாமணி மற்றும் அவரது உறவினர்கள் சகிதம் கன்னிராஜபுரம் பத்திரகாளியம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுக்கொண்டிருக்கும் போது கூட்ட நெரிசலில் தனது பேத்தி கவிபிரஜாவின் கழுத்தில் கிடந்த 3 1/2 பவுன் எடையுள்ள சிலுவை டாலர் செயினையும், அதேபோல் சிந்தாமணி கழுத்தில் கிடந்த 4 பவுன் தாலிச்செயினையும் யாரோ அடையாளம தெரியாத நபர் திருடி சென்றுவிட்டதாகவும், அதன் மதிப்பு 1,12,500/– ரூபாய் இருக்கும் என்றும் தங்கள் தங்கநகைகளை திருடிச்சென்றவர்களை கண்டிபிடித்து தங்கநகைகளை மீட்டுத்தருமாறும் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.346/2021, U/s.379 IPC ன் கீழ் வழக்குபதிவு செய்து புலன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் வழக்கின் எதிரிகள் சம்பந்தமாக பல்வேறு இடங்களில் விசாரித்தும் பார்த்தும் உள்ளூர் மற்றும் வெளியூர் பழங்குற்றவாளிகளை தணிக்கை செய்தும் மற்றும் தனிப்படை அமைத்து வழக்கின் எதிரிகள் சம்பந்தமாக விசாரித்தும் எதிரிகள் சம்பந்தமாக ஒரு விபரமும் தெரியாமல் வழக்கானது தொடர்ந்து புலன் விசாரணையில் இருந்து வருவதால் இவ்வழக்கினை கண்டிபிடிக்க இயலாத வழக்கு என்று வழக்கானது ( Un Detected) செய்து முடிக்கப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை மனுவின் சுருக்கம்.**

கடந்த 25.08.2021ந் தேதி காலை 10.00 மணியளவில் புகார்தாரர் மற்றும் அவரது பேத்திகளான கவிபிரஷா மற்றும் சஷ்டிகாஸ்ரீ மற்றும் புகார்தாரரின் கணவர் வயணக்கன் ஆகியோரும் புகார்தாரர் தெருவை சேர்ந்த சிந்தாமணி மற்றும் அவரது உறவினர்கள் சகிதம் கன்னிராஜபுரம் பத்திரகாளியம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுக்கொண்டிருக்கும் போது கூட்ட நெரிசலில் தனது பேத்தி கவிபிரஜாவின் கழுத்தில் கிடந்த 3 1/2 பவுன் எடையுள்ள சிலுவை டாலர் செயினையும், அதேபோல் சிந்தாமணி கழுத்தில் கிடந்த 4 பவுன் தாலிச்செயினையும் யாரோ அடையாளம தெரியாத நபர் திருடி சென்றுவிட்டதாகவும், இது குறித்து மனுதாரர் சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தன் அடிப்படையில் குற்ற எண்.346/2021, U/s.379 IPC ன் கீழ் வழக்குபதிவு செய்யப்பட்டதாகவும், இவ்வழக்கில் தற்போது விசாரணை அதிகாரியானவர் புகார்தாரரின் திருடு போன தங்க நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் (undetected) என்று குறிப்பிட்டு இறுதி அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட் நாளிலிருந்து இதுநாள் வரையிஉம் மேற்படி காவல் நிலையத்தில் பல விசாரணை அதிகாரிகள் மாறியுள்ளதாகவும், ஆனால் எந்த ஒரு அதிகாரியும் புகார்தாரரின் திருடு போன தங்க நகையை தேடி கண்டுபிடிக்க எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றும், சம்பவ இடத்தின் அருகில் உள்ள சாட்சிகள் யாரையும் இதுவரை விசாரிக்கவில்லை என்றும், சம்பவ இடத்தின் அருகில் இருந்த சிசிடிவி பதிவுகளை பார்வையிடாமலும், பார்வையிட முயற்சிகள் மேற்கொள்ளாமலும் இவ்வழக்கில் இறதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு பதிஉ செய்யப்பட்ட நாளிலிருந்து இதுநாள்

வரையிலும் எத்தனையோ விசாரணை அதிகாரிகள் மாறியும் இதுநாள் வரை என்னையோ, சிந்தாமணி என்பவரையோ, சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளையோ, பத்திரகாளியம்மன் கோவில் திருவிழா நடத்திய நிர்வாகஸ்தர்களையோ எந்தவொரு விசாரணை அதிகாரியும் விசாரிக்கவில்லை என்றும் எனவே விசாரணை அதிகாரியானவர் இவ்வழக்கில் திருடு போன புகார்தாரர்களின் தங்க நகைகளை கண்டுபிடிப்பதற்கு இதுவரை எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்பதால் இவ்வழக்கில் கூடுதல் விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், இல்லாவிடில் புகார்தாரரக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும் எனவே வழக்கினை மீண்டும் முறையாக விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு ஆட்சேபனை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தீர்வு

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர் தரப்பில் கடந்த 25.08.2021ம் தேதியன்று புகார்தாரர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.346/2021 பிரிவு 379 IPCன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதியறிக்கை ( Un Dedected) செய்து தாக்கல் செய்யப்பட்டதால் மனுதாரரின் ஆட்சேபனை குறித்து அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை மனுதாக்கல் செய்துள்ளார்.

6) மேற்படி ஆட்சேபனை மனுவையும் வழக்கின் ஆவணங்களையும்

பரிசீலனை செய்யும் போது குற்ற இறுதி அறிக்கையில் திருடு போன இடத்தில் இருந்த சி.சி.டிவி பதிவுகளை ஆய்வு செய்து புலன் விசாரணை அதிகாரி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், சம்பவம் நடந்த இடத்தில் உள்ள சாட்சிகளை யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது. இவ்வழக்கின் புகார்தாரரோ, இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களோயோ சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் ஆவணங்கள் வழியாக தெரியவருகிறது.

7) இவ்வழக்கில் கன்னிராஜபுரம் பத்திரகாளி அம்மன் கோவில் திருவிழாவின் போது புகார்தாரரின் பேத்தி சுமார் 3 1/2 பவுன் தங்க செயினை யாரோ அடையாளம் தெரியாத நபர் திருடி உள்ளதாக புகார் மனு கொடுக்கப்பட்டுள்ள நிலையில், இவ்விழக்கின் புலன் விசாரணை அதிகாரி குற்ற இறுதி அறிக்கையுடன் விசாரணை குறித்து எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது.

8) எனவே சாயல்குடி காவல் நிலைய பொறுப்பு அதிகாரி சாயல்குடி காவல் நிலைய குற்ற எண் 346/2021 வழக்கில் உரிய விசாரணை மேற்கொண்டு வருகின்ற 10.04.2026ம் தேதிக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

9) காவல் ஆய்வாளர் சாயல்குடி காவல் நிலையம் அவர்களுக்கு புகார்தாரரின் ஆட்சேபணை மனுவையும் இந்த உத்தரவையும் இணைத்து அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 06.03.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.06 17:25:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.